யா/விக்னேஸ்வரக் கல்லூரி
கரவெட்டி

# பரிசளிப்பு விழாவும்

## நிறுவுநர் நினைவு நாளும் - 2017

# அதிபர் அறிக்கை

தலைவர்

திரு க. மு. கனகலிங்கம்
(கல்லூரி முதல்வர்)

முதன்மை விருந்தினர்

பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா
(கணிதத்துறை பேராசிரியர், முன்னாள் பீடாதிபதி விஞ்ஞானமும்
தொழில்நுட்பவியல் பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

J/ Vigneswara College
Karaveddy

## Annual Prize Day & Founder's Day - 2017

# Principal's Report

**PRESIDENT**
Mr. K. M. Kanagalingam
(Principal)

**Chief Guest**
Prof. Sivakolundu Srisatkunarajah
(Professor in Mathematics,
Former Dean - Faculties of Science and Technology,
University of Jaffna)

நிறுவுநர் தின உரை நிகழ்த்துபவர்
வைத்திய கலாநிதி. க. சிவசுதன்
(ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர் அழைப்பு
- மங்கல விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- நிறுவுநர் நினைவுரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதமவிருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- கலைநிகழ்வுகள்
    - பேச்சு
    - தனி இசை
    - கவியரங்கம்
    - ஆங்கிலக் கவிதை
    - குழு நடனம்
    - குழு இசை
    - நாடகம் - 'மனமே மாறிவிடு'
- நன்றியுரை
- பாடசாலைக் கீதம்

# யா/ விக்னேஸ்வரக் கல்லூரியின் 2017 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா – அதிபர் அறிக்கை (30. 06. 2018)

எல்லாம் வல்ல வெல்லன் விநாயகர் திருவருள் முன்னிற்க இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா அவர்களே, அவர்தம் துணைவியார் திருமதி. சிவராணி சிறிசற்குணராஜா அவர்களே, எமது அழைப்பை ஏற்று இங்கே வருகை தந்திருக்கும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களே, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. நந்தகுமார் அவர்களே, கோட்டக் கல்விப் பணிப்பாளர் K. K. யோகநாதன் அவர்களே, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, முன்னாள் அதிபர்களே, ஆசிரிய ஆலோசகர்களே, நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்ற வந்திருக்கும் வைத்திய கலாநிதி க. சிவசுதன் அவர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, இப்பாடசாலையின் பிரதி அதிபர்களே, பகுதித் தலைவர்களே, ஆசிரியர்களே, கல்வி சாரா ஊழியர்களே, பழைய மாணவர்களே, பெற்றோர்களே, மாணவச் செல்வங்களே அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கங்கள்.

கடந்த வருடம் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி எமது பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வை மிகச் சிறப்பாக நிகழ்த்தி முடித்திருக்கிறோம். குறித்த காலத்தில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு கல்லூரிச் சமூகம் பெருமளவில் உதவி புரிந்துள்ளது. நூற்றாண்டு விழா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடை பவனி, பழைய மாணவ அணிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள், பாடசாலைகளுக்கு இடையிலான ஆக்க இலக்கியப் போட்டிகள் மற்றும் இரத்த தான நிகழ்வுகள் என்றவாறான பல்வேறு நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேறியுள்ளன. நூற்றாண்டு விழாவின் இறுதி நிகழ்வுகள் 06. 10. 2017 மற்றும் 07. 10. 2017 ஆந் திகதிகளில் நடைபெற்றன. முதல் நாள் நிகழ்வுக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நா. வேதநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள். இரண்டாவது நாள் நிகழ்விற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள இருந்த போதிலும் அவருக்கு சுகவீனம் ஏற்பட்டு சமுகமளிக்க முடியவில்லை. பிரதிநிதியாக கௌரவ வடக்கு மாகாண கல்வி அமைச்சர் திரு. க. சர்வேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

இன்றைய பரிசில் தினத்திற்கு வருகை தந்திருக்கும் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா அவர்கள் எமது வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர் தனது விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கலாநிதிப் பட்டப் படிப்பை இலண்டன் எடிபரோ பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தவர். நீண்டகாலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே கணிதப் பேராசிரியராகக் கடமையாற்றி ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கியுள்ளதோடு பல்வேறு பதவிகளினூடாக சிறந்த சேவையாற்றி வருகின்றார். பல்வேறு தலைப்புக்களிலும் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதி பல விருதுகளைப் பெற்றுள்ளார். பயன் மிக்க கருத்துக்களை வழங்கும் சிறந்த பேச்சாளர். பழகுவதற்கு இனிமையானவர். மதிப்பிற்குரிய பேராசிரியரின் துணைவியார் திருமதி. சிவராணி சிறிசற்குணராஜா அவர்களும் யாழ் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி ஆங்கில மொழியியல் துறையில் சிறப்பான சேவையாற்றி வருகின்றார். இருவரும் இந்த விழாவிலே கலந்து கொண்டு மாணவர்களை மகிழ்வித்தமையை எமது கல்லூரிச் சமூகம் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

பரிசில் தினத்திலே இக் கல்லூரியை நிறுவிய பெருமகன் வீரவாகு சிற்றம்பலம் அவர்களை நினைவு கூரும் முகமாக நினைவுப் பேருரையொன்று இடம்பெறுவது வழமையாகும். இந்த வருடத்திற்கான நினைவுப் பேருரையை வழங்க வந்திருக்கும் வைத்திய கலாநிதி க. சிவசுதன் அவர்கள் இக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உள நலச் சிகிச்சைப் பிரிவில் சிறந்த சேவையாற்றி வரும் அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரருமாவார். அவர் இவ் விழாவிலே கலந்து கொண்டு நினைவுப் பேருரையை ஆற்றுவதன் மூலம் எமது கல்லூரியை பெருமையடைய வைத்திருக்கின்றார்.

இன்றைய விழாவிலே சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் கரவெட்டி பிரதேச செயலர் திரு. ஈ. தயாபரன் அவர்களும் இக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். இப் பிரதேசத்திற்கு பயனுள்ள சேவையை ஆற்றிவரும் பிரதேச செயலர் அவர்கள் இங்கே கலந்து கொண்டிருப்பது எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

விக்னேஸ்வரக் கல்லூரியானது கரவெட்டி வாழ் மக்களினது வாழ்வியலை மேம்படுத்தும் நிறுவனமாகக் கடந்த நூற்றாண்டுகளுக்கு மேலாகச் செயற்பட்டு வருகின்றது. இப் பிரதேச மாணவர்களினது பல்வேறு தேர்ச்சிகளை மேம்படுத்தி மகிழ்வான வாழ்விற்கு வழி கோலும் கல்லூரியாக செயற்பட்டு வருகின்றது.

எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளால் அவ்வப்போது பல்வேறு வகையான உதவிகள் கிடைத்து வருகின்றது. நூற்றாண்டு விழாவை ஒட்டி நடைபெற்ற பிரார்த்தனை மண்டப புனரமைப்பின் போது கல்லூரியின் முன்னாள் அதிபர் சோமசுந்தரம் அவர்களின் குடும்பத்தினரால் பிரார்த்தனை மண்டபத்தைச் சுற்றி அலுமினிய வேலி அமைத்துத் தரப்பட்டுள்ளது. இன்னொரு முன்னாள் பதில் அதிபர் ஆட்டிஸ்ற் மாஸ்டர் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் குடும்பத்தினரால் வடக்குப் புற மதில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் குடும்பத்தினரால் நூற்றாண்டு விழா நிறைவு மலர் வெளியீட்டுக்கான நிதி அனுசரணை வழங்கப்பட்டுள்ளது. கல்லூரியின் பெயரைத்தாங்கிய நுழைவாயில் சுவரை அமரர் க.சின்னத்தம்பி குடும்பத்தினர் அழகான முறையில் அமைத்துத் தந்துள்ளனர் அவர்களுக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும் மேலும் நூற்றாண்டு விழாவின் செலவுகளை எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்றுக்கொண்டு பேருதவி புரிந்துள்ளது. இதற்காக பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. செல்வரட்ணம், செயலாளர் திரு. கி. ரவிக்குமார், பொருளாளர் திரு. உதயகுமார் உட்பட பழைய மாணவர் சங்கத்தினருக்கு எமது நன்றியறிதலை வெளிப்படுத்துகின்றோம்.

அடுத்த வருட ஆரம்பத்தில் ஓய்வு பெற இருக்கின்றேன். ஆகவே, கடந்த ஆறு வருடங்களாக எனது சேவைக் காலத்தில் பாடசாலையின் சகல விருத்திப் பணிகளிலும் ஒன்றிணைந்து செயற்பட்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது இதயங் கனிந்த நன்றிகளை இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## கல்லூரி முகாமைத்துவம்

### கல்லூரியின் ஆளணி விபரம் - 2017

1. ஆசிரிய ஆளணி விபரம்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானப் பட்டதாரிகள் | - | 11 |
| வர்த்தகப் பட்டதாரிகள் | - | 03 |
| கலைப் பட்டதாரிகள் | - | 19 |
| பயிற்றப்பட்டோர் | - | 09 |
| மொத்தம் | - | 42 |

2. தேவையான ஆளணி விபரம்

| | | |
|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் | - | 01 |
| வரலாறு | - | 01 |
| கணிணி ஆய்வுகூடம் | - | 01 |
| பொது தகவல் தொழினுட்பம் | - | 01 |
| மொத்தம் | - | 04 |

3. கல்வி சாரா ஊழியர் விபரம்

| | | |
|---|---|---|
| ஆய்வுகூட உதவியாளர் | - | 01 |
| நூலக உதவியாளர் | - | 01 |
| பாடசாலை பகல் காவலாளி | - | 02 |
| பாடசாலைப் பணியாளர் | - | 01 |
| மொத்தம் | - | 05 |

4. புதிதாக இணைந்து கொண்டோர் விபரம்

| | | |
|---|---|---|
| திரு. ந. நந்தன் | - | பிரதி அதிபர் |
| திரு. சு. சுதாகரன் | - | உதவி அதிபர் |
| திரு. இ. சுரேஸ்குமார் | - | ஆசிரியர் (ஆங்கிலம்) |
| திருமதி. உ. இராஜேஸ்வரன் | - | ஆசிரியர் (விஞ்ஞானம்) |
| திருமதி. வி. ஞானராஜ் | - | ஆசிரியர் (விஞ்ஞானம்) |
| திரு. க. சேதுலிங்கம் | - | ஆசிரியர் (தமிழ்) |
| திரு. க. நாகராஜா | - | ஆசிரியர் (கணிதம்) |
| திருமதி. ஆ. நகுலேஸ்வரன் | - | ஆசிரியர் (நடனம்) |
| திருமதி. ந. சிவநிதிச்செல்வன் | - | ஆசிரியர் (நூலகர்) |
| திரு. க. விஜயதீபன் | - | ஆசிரியர் (விவசாயம்) |

5. 2017 இல் இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

| | |
|---|---|
| திரு. பா. உமாகரன் | பிரதி அதிபர் |
| திரு. கு. லோகேஸ்வரன் | பிரதி அதிபர் |
| திரு. ச . பாலச்சந்திரன் | பிரதி அதிபர் |
| திரு. அ. பவானந்தன் | பிரதி அதிபர் |
| திருமதி. கு. முகுந்தராஜ் | ஆசிரியர் (நடனம்) |

6. 2017 இல் ஓய்வு பெற்றோர்

திருமதி. சு. கிருஸ்ணதாசன் (பகுதித்தலைவர்)

மாணவர் பரம்பல்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6 – 11 | 194 | 134 | 328 |
| 12 – 13 | 68 | 49 | 117 |
| மொத்தம் | 262 | 183 | 445 |

## கல்வி சார் அடைவுகள்

க. பொ. த சாதாரண தரப் பரீட்சை

பெறுபேற்றுப் பகுப்பாய்வு – 2017

| பாடம் | தோற்றியோர் | சித்தி வீதம் |
|---|---|---|
| சைவநெறி | 42 | 85.7 |
| கிறிஸ்தவம் | 2 | 100 |
| தமிழ் | 44 | 95.5 |
| ஆங்கிலம் | 44 | 25 |
| கணிதம் | 44 | 65.9 |
| வரலாறு | 44 | 75 |
| விஞ்ஞானம் | 44 | 77.5 |
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | 14 | 100 |
| புவியியல் | 12 | 100 |
| குடியுரிமைக் கல்வி | 18 | 66.7 |
| கர்நாடக சங்கீதம் | 3 | 100 |
| சித்திரம் | 19 | 89.5 |
| பரதநாட்டியம் | 5 | 100 |
| தமிழ் இலக்கிய நயம் | 15 | 86.7 |
| தகவல் தொழில்நுட்பம் | 4 | 100 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 36 | 97.2 |
| விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் | 4 | 75 |

க. பொ. த. உயர்தரப் பரீட்சை

பெறுபேற்றுப் பகுப்பாய்வு - 2017

| பாடம் | தோற்றியோர் | சித்தி வீதம் |
|---|---|---|
| பௌதிகவியல் | 16 | 56.25 |
| இரசாயனவியல் | 15 | 60 |
| இணைந்த கணிதம் | 12 | 75 |
| உயிரியல் | 5 | 60 |
| கணக்கீடு | 4 | 100 |
| வணிகக்கல்வி | 5 | 80 |
| பொருளியல் | 6 | 66.67 |
| தமிழ் | 18 | 100 |
| புவியியல் | 17 | 94 |
| அளவையியல் | 4 | 50 |
| இந்து நாகரிகம் | 11 | 100 |
| அரசியல் விஞ்ஞானம் | 3 | 0 |
| நாடகமும் அரங்கியலும் | 2 | 100 |
| கர்நாடக சங்கீதம் | 1 | 100 |
| பரதநாட்டியம் | 1 | 100 |
| பொது ஆங்கிலம் | 42 | 4.7 |
| தொடர்பாடல் தகவல் தொழினுட்பம் | 2 | 100 |

## பல்கலைக் கழக தகுதி – 2017

| துறை | தோற்றியோர் | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|
| கணிதம் | 12 | 05 |
| விஞ்ஞானம் | 05 | 03 |
| வர்த்தகம் | 05 | 03 |
| கலை | 21 | 17 |

## பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்றோர் விபரம் - 2017

- செல்வி. தர்சினி ஈசன் - மருத்துவம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)
- செல்வன். பாலேந்திரன் சஞ்சீபன் - பௌதிக விஞ்ஞானம் (கிழக்குப் பல்கலைக்கழகம்)
- செல்வன். குநேந்திரசீலன் சக்தீசன் - கலை (பேராதனைப் பல்கலைக்கழகம்)
- செல்வி. நிரூபா இரத்தினம் - கலை (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- செல்வி. சானுகா உதயராஜ் - கலை (கிழக்குப் பல்கலைக்கழகம்- மட்டக்களப்பு)
- செல்வன். பெனடிக்ற் லிவிங்ரன் - கலை (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- செல்வி. ஆன் வினோஜிதா அன்ரனி இராசநாயகம் - வர்த்தகம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## 2017 ஆம் ஆண்டின் சிறந்த பெறுபேறுகள்

### க. பொ. த சாதாரண தரம்

| | |
|---|---|
| செல்வி. தமிழினி தவராசா | 8A S |
| செல்வன் யோகராஜன் வேணுஜன் | 7A B S |
| செல்வி திலைக்ஷனா பிறேமதாஸ் | 7A B |
| செல்வி திலக்ஷனா சுதானந்தன் | 5A 2B 2C |
| செல்வன் குலேந்திரன் ஆர்த்திகன் | 5A 2C S |
| செல்வி ரம்மியா பிரபாகரன் | 5A 2B C S |
| செல்வி சிலக்ஷிகா சிறீகரன் | 5A 2C S |
| செல்வன் சிறீரங்கன் சாரங்கன் | 4A 2B 2C S |
| செல்வி அலிஸ்ரா டிலக்ஷனா றெயினோல்ட் நேசதாஸ் | 4A B 3C S |
| செல்வன் மகாதேவன் மதுசன் | 4A 2B 2C |
| செல்வி ஜீவலக்ஷனா குகாதரன் | 3A 4B C S |
| செல்வி உதயவாணி உதயகுமார் | 3A 2B 3C S |
| செல்வன் ஜெகன் அன்ரனிசுஜாந் | 3A 3B 3S |

- க. பொ. த உயர்தரம்

**கணிதத் துறை**

| | |
|---|---|
| செல்வி. தயானி கதிரவேலு | 2A C |
| செல்வி. தேனுகாசினி ஸ்ரீவேல்முருகராசா | 2B C |

**உயிரியல் துறை**

| | |
|---|---|
| செல்வி. சிவப்பிரியா சுதாகரன் | B C S |
| செல்வி. சரண்யா சச்சிதானந்தம் | 2C S |
| செல்வன் ஈசன் ராஜேஸ்வரன் | 2C S |
| செல்வன். சத்தியகீர்த்தி கேமதர்சன் | 2C S |
| செல்வன். மகேந்திரன் கவியரசன் | A 2S |

**வர்த்தகத் துறை**

| | |
|---|---|
| செல்வன் அருமைநாயகம் அனுஜன் | 3B |

**கலைத் துறை**

| | |
|---|---|
| செல்வி. ரேணுகா உதயகுமார் | 2A B |
| செல்வி மணிமேகலா ஆனந்தராசா | 2A B |
| செல்வன். ஜெயக்குமார் ஜெயகரன் | 2A C |
| செல்வி. கோபிதா சத்தியகீர்த்தி | A 2B |
| செல்வன். நகுலேஸ்வரன் நிசாங்கன் | A B C |
| செல்வி. சிவகுமார் கிருஷாயினி | A B C |
| செல்வி தாட்சாயினி கதிரவேலு | A 2C |

**2017 ம் ஆண்டின் இணைப் பாட விதான சாதனைகள்**

**தமிழ்த்தினப் போட்டிகள்**

வலய மட்ட முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| • செல்வி. லோகாசினி ஸ்ரீவேல்முருகராசா | குறுநாடக ஆக்கம் | பிரிவு 4 | முதலாம் இடம் |
| • செல்வி. கஜதாரணி ரவீந்திரா | வாசிப்பு | பிரிவு 2 | மூன்றாம் இடம் |

**ஆங்கில தினப் போட்டிகள்**

**Zonal Level**

| | | |
|---|---|---|
| • Miss. Nithushana Nimalaraja | Copy Writing | 3rd Place |
| • Miss. Ruththashini Kokelan | Cursive Writing | 2nd Place |
| • Miss. Sandusha Chandrakumar | Oratory Prepared | 3rd Place |
| • Mr. Krishnathasan Thenushan | Story Telling | 2nd Place |
| • Miss. Kathampary Krishnathasan | Solo Acting | 2nd Place |

சமூக விஞ்ஞானப் போட்டிகள்

செல்வன் குலேந்திரன் நிமல்ராஜ் வலய மட்டம் இரண்டாம் இடம்

அறநெறி சார்ந்த போட்டிகள்

- இராமகிருஷ்ண மிஷன் நாடாத்திய பொன்மொழிகளுக்கான போட்டியில்
  செல்வி. ம. சோபிகா பிரிவு 2 இல் முதலாமிடம்

- விவேகானந்தரது 150 வது பிறந்த தினப் போட்டிகள்
  - செல்வன் க. யதிஸ்சன் மனனம் பிரிவு 2 இரண்டாமிடம்
  - செல்வி ர. ரக்ஷனா மனனம் பிரிவு 2 மூன்றாமிடம்
  - செல்வன் ம. கவியரசன் மனனம் பிரிவு 3 முதலாமிடம்
  - செல்வி உ. சானுகா மனனம் பிரிவு 3 இரண்டாமிடம்
  - செல்வி. சி. நிதர்ஷனா மனனம் பிரிவு 3 மூன்றாமிடம்

- திருமுறைகள் பண்ணோடு ஓதுதல் மற்றும் திருக்குறள் போட்டி (வலய மட்டம்)
  - செல்வி. ர. கானப்பிரியா பண்ணிசை பிரிவு 3 மூன்றாமிடம்
  - செல்வன் சி. கோகுலன் பண்ணிசை பிரிவு 4 இரண்டாமிடம்

ஏனைய போட்டிகள்

- பெரதேனியா பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவு அகில இலங்கை ரீதியில் நடாத்திய முதலாவது புவியியல் ஒலிம்பியாட் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றினார்கள்
  - செல்வி. கி. காதம்பரி
  - செல்வி. ஸ்ரீ. லோகாசினி
  - செல்வன். வி. அபிமன்யு
- விஞ்ஞான தின விஞ்ஞான வித்தைப் போட்டியில் எமது மாணவர்கள் வலய மட்டத்தில் முதல் இரு இடங்களைத் தட்டிக் கொண்டனர்

  செல்வி ச. சந்துஷா - முதலாம் இடம்

  செல்வன் ம. யுவராஜ் - இரண்டாமிடம்
- அகில இலங்கை ரீதியில் கல்வி அமைச்சும் AAT (இலங்கை) உம் இணைந்து நடாத்திய சிறந்த கணக்கறிக்கை பேணுகின்ற போட்டியில் யாழ்மாவட்டத்தில் சிறந்த கணக்கறிக்கை பேணுகின்ற பாடசாலையாக எமது பாடசாலை முதலிடத்தை தட்டிக் கொண்டது. இது வெற்றி பெற உழைத்த ஆசிரியர்கள்
  - திருமதி. ந. கிருஸ்ணமூர்த்தி
  - செல்வி. லோ. கணபதிப்பிள்ளை
  - திரு. க. சேதுலிங்கம்
  - திரு தி.கிரிதரன் ஆகியோருக்கு எமது பாராட்டுக்கள்

விளையாட்டுச் சாதனைகள்

கரப்பந்து (20 வயதிற்கு உட்பட்ட) – வலய மட்டம் 2nd Runner up

| | |
|---|---|
| K. மனுசங்கர் | B. வாரீசன் |
| J. தர்சிகன் (உப தலைவர்) | K. நிவேதன் |
| N. நிசாங்கன் | R. N. G. வினோஜன் |
| S. ரமேஷானந் (தலைவர்) | J. பிரியதர்சன் |
| S. சதீஷானந் | T. தேவநேரியன் |
| P. மதுர்சன் | M. திவாகரன் |

கடற்கரைக் கரப்பந்து (20 வயதிற்கு உட்பட்ட) – வலய மட்டம் 1st Runner up

J. தர்சிகன்

S. ரமேஷானந்

கிரிக்கெட் (20 வயதிற்கு உட்பட்ட) – வலய மட்டம் 2nd Runner up

| | |
|---|---|
| R. N. G. வினோஜன் (தலைவர்) | S. கஜலக்ஷன் |
| B. சஞ்சீபன் (உப தலைவர்) | S. சாரங்கன் |
| P. மதுர்சன் | M. திவாகரன் |
| S. சிராஜ் | S. சாய்குமார் |
| K. நிவேதனன் | V. சுலக்ஷன் |
| P. நிதர்சன் | V. வஜிபன் |
| S. ஆர்த்திகன் | |

**எமது கல்லூரியில் இயங்குகின்ற மன்றங்கள் மற்றும் கழகங்கள்**

| மன்றம்/ கழகம் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|
| 1. இந்து மன்றம் | திரு. த. மகிந்தன்<br>திருமதி நி.கேதீஸ்வரன்<br>செல்வி இ.இராசையா |
| 2. கிறிஸ்தவ மன்றம் | திருமதி.ஆ.மே.ஜெ.நாகராசா |
| 3. தமிழ் மன்றம் | திருமதி. ப. வேல்முருகராசா<br>திருமதி. செ. விநாயகமூர்த்தி |
| 4. ஆங்கில மன்றம் | திருமதி. த. வைகுந்தன்<br>திரு சி.கஜேந்திரன்<br>திரு இ.சுரேஸ்குமார்<br>செல்வி லோ.கணபதிப்பிள்ளை |
| 5. விஞ்ஞான மன்றம் | திருமதி. ஜெ. ரவீந்திரன்<br>திருமதி. உ. இராஜேஸ்வரன்<br>செல்வி. லோ. கணபதிப்பிள்ளை<br>திருமதி. தே. இந்திராஜ் |
| 6. உயர்தர விஞ்ஞான மன்றம் | திரு. சு. குகநேசன்<br>திரு. பா. உதயராஜன் |
| 7. உயர்தர தமிழ் மன்றம் | திருமதி ர. ஸ்ரீகண்ணன்<br>திரு த. மகிந்தன் |
| 8. உயர்தர வணிக மன்றம் | திரு சு. சுந்தரமூர்த்தி<br>திருமதி க.சிவகுமமார்<br>திரு வே.பகீரதன் |

| | |
|---|---|
| 9. உயர்தர மாணவர் மன்றம் | திருமதி. க. குகானந்தன்<br>திரு ச.உதயநாதன்<br>திரு. த.விஜயசங்கர் |
| 10. இயற்கை அவதானிப்புக் கழகம் | திருமதி. வா. ஞானானந்தன்<br>திரு. த. சுலக்சன் |
| 1. விவசாயக் கழகம் | திரு. க. விஜயதீபன்<br>திரு. ந. நந்தன் |
| 2. கணணிக் கழகம் | திருமதி. ரா. வாசுதேவன்<br>திரு. க. சேதுலிங்கம் |
| 3. சமூக விஞ்ஞான மன்றம் | திருமதி. ர. ஜெயக்குமார்<br>திரு. ச. உதயநாதன் |
| 4. அழகியல் மன்றம் | திரு. த. சுலக்ஷன்<br>திருமதி ஜெ.செல்வமோகன்<br>திருமதி. ஆ.நகுலேஸ்வரன் |
| 5. விளையாட்டுக் கழகம் | திரு. சி. கௌசிகன்<br>திரு த.சுலக்சன்<br>திரு. ச. உதயநாதன் |
| 6. சாரணியம் | திருமதி. ர. சிவசபேசன்<br>திருமதி ந.கிருஸ்ணமூர்த்தி<br>திரு. க. சேதுலிங்கம் |
| 7. சுகாதாரக் கழகம் | திரு. சி. கௌசிகன்<br>திருமதி. ஜெ. ரவீந்திரன்<br>திருமதி. உ. இராஜேஸ்வரன் |
| 8. புத்தாக்குநர் கழகம் | திருமதி. தே. இந்திராஜ்<br>திருமதி. வை. செந்தில்மாதவன்<br>செல்வி. லோ. கணபதிப்பிள்ளை<br>திரு. சு. குகநேசன் |
| 9. அனர்த்த முகாமைத்துவம் | திரு. ச. உதயநாதன்<br>திரு. சி. கௌசிகன்<br>திருமதி. வை. செந்தில்மாதவன் |
| 10. பாடசாலை சிறுவர் குழு | திரு. த. விஜயசங்கர்<br>திரு. த. மகிந்தன்<br>திருமதி. ஜெ. நாகராஜா |
| 11. சுற்றாடல் கழகம் | திருமதி. நி. கேதீஸ்வரன் |
| 12. MOHTER SRILANKA | திருமதி. உ. இராஜேஸ்வரன்<br>திருமதி. ஜெ. ரவீந்திரன் |
| 13. மாணவர் பாராளுமன்றம் | திரு. ச. உதயநாதன் |

மேற்படி மன்றச் செயற்பாடுகள் அவற்றுக்குரிய பொறுப்பாசிரியர்களினால் மாணவர்களின் ஆளுமை விருத்தி, தலைமைத்துவப் பண்பு, சிந்தனை ஆற்றல், ஆக்கத்திறன் ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் முகமாக சிறப்பாகச் செயற்படுத்தபட்டு வருகின்றமை பாராட்டுதற்குரியது

**English Union**

- English Literacy Association conducts 40 minutes programme trice a term which helps the students to bring out their potential talents. Students are given opportunity to speak and show their talents. These programmes create English environment in the school.
- English teachers prepare and practice the students to participate and win at the English Day competitions held at several levels
- 'CAD' programme is held in the school to enhance the speaking skill among the students
- Language lab and smart room help the students to learn English efficiency and effectively

**இந்து மன்றம்**

- வெள்ளிக்கிழமை தோறும் ஆராதனை வழிபாடு நடைபெறுவதனால் மாணவர் பிரார்த்தனையுடன் இறை தரிசனப் பலனையும் பெற்றுக் கொள்ள ஆசிரியர், மாணவர் நற்சிந்தனையும் இடம்பெறுகிறது
- நவராத்திரி தினத்தை முன்னிட்டு பண்ணிசைப் போட்டி, பேச்சு, கோலம் போடுதல், மாலை கட்டுதல் தொடர்பான போட்டிகள் இடம்பெற்று அப்போட்டியில் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றது. நவராத்திரி விழாப் பூசைகள், கலை நிகழ்வுகள் சிறப்பாக நடாத்தப்படுகின்றன
- சைவபரிபாலன சபை, யாழ் மாநகர சபை நடாத்தும் சமய அறிவுப் போட்டி, வலய மட்ட சமயப் போட்டிகள், உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலய சமய அறிவுப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றிச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்கின்றனர்
- வாரந்தோறும் நடைபெறும் செவ்வாய் ஒன்றுகூடலின் போது ஆசிரியர், மாணவர், நற்சிந்தனை இடம்பெறுகிறது
- நாளாந்த சமய ஆராதனை நிகழ்வோடு பாடசாலை ஆரம்பிக்கப்படுகிறது

**அழகியல் மன்றம்**

- தமிழ்த் தினப் போட்டிகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து கோட்ட, வலய, மாகாணம் வரை மாணவர்களை நடன, சங்கீத, நாடக வகைகளில் பங்கு பெறச் செய்தமை
- பாடசாலையில் இடம்பெறும் சமய விழாக்கள், கலை விழாக்கள், ஆலய உற்சவ காலங்களில் இடம்பெறும் கலை நிகழ்வுகளுக்காக மாணவரைப் பயிற்றுவித்து மேடை ஏற்றியமை
- ஏனைய தனியார் நிகழ்வுகளுக்கும் மாணவரை தயார் செய்து மேடை ஏற்றியமை

### தமிழ் மன்றம்

- இடைநிலை மன்றம், உயர்தர மன்றம் போன்றவற்றின் மூலம் பேச்சு, பாட்டு, பட்டிமன்றம், கவிதை போன்ற நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி மொழித்திறனை விருத்தி செய்தல்
- பிரதேச சபை, பிரதேச செயலக கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் பெற்றுக் கொள்கின்றமை
- தமிழ்த்தினப் போட்டி, சிறுவர் தினம், முதியோர் தினம், மகளிர் தினம், மாற்றுவலுவுடையோர் தினம் போன்றவற்றிற்கான பாடசாலைப் போட்டிகளை நடாத்தி பயிற்சிகள் வழங்கி பங்குபற்ற ஊக்குவித்து சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் பெற்றுக் கொடுத்தமை
- ஆடிப்பிறப்பு, தைப்பொங்கல், நவராத்திரி விழா நிகழ்வுகளுக்கு மாணவர்களை ஒழுங்குபடுத்தி விடுதல்
- க. பொ. த. உயர்தர மாணவர் செயற்றிட்டம் மூலம் தரம் 6 மாணவர்களுக்கு மொழித்திறன் விருத்தி வகுப்புக்களை நடாத்தி மொழித்திறனை வளர்த்தல்

### விஞ்ஞானமன்றம்

- மாணவர்களை விஞ்ஞான பூர்வமாகச் சித்திப்பதற்குத் தூண்டுதல்
- மாணவர்களை வினாடிவினாப் போட்டிகளுக்குத் தயார்ப்படுத்தலும் பல்வேறு மட்டங்களில் வெற்றிபெறச் செய்தலும்
- அகில இலங்கை ரீதியில் நடைபெறும் ஒலிம்பியாட் போட்டிகளில் மாணவர்களை பங்குபற்றுவதற்கு தயார்ப்படுத்தலும் பங்குபற்றலும்.
- ஆய்வுகூட செய்முறைகளின் ஊடாக மாணவர்களின் விஞ்ஞான ரீதியான திறன்களை வெளிக் கொணர்தல்

### மாணவர் பாராளுமன்றம்

இலங்கையில் முதல் தடவையாக 1930 ஆம் ஆண்டு மாணவர் பாராளுமன்றம் எமது பாடசாலையிலேயே ஆரம்பமானது என்ற பெருமை எமக்குரியதாகும். அப்போதைய மாணவர் பாராளுமன்ற அங்கத்தவர்களான திரு. மு. சிவசிதம்பரம், திரு. பொன் கந்தையா, திரு. ஜெயக்கொடி போன்றோர் பின்நாளில் இலங்கை பாராளுமன்றத்திலே புகழ் பூத்தவர்களாகவும் பிரதி சபாநாயகர் வரையிலும் பதவிகளைப் பெற்று புகழ் சேர்த்தமை யாவரும் அறிந்ததே.

இந்த வரலாற்றுப் பின்னணியுடன் எமது பாடசாலையில் மாணவர் பாராளுமன்றம் 18. 03. 2016 இலிருந்து செயற்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் வாக்கெடுப்பின் மூலம் 95 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். நிறைவேற்று சபையாக செயலாளர் நாயகம் திரு. க. மு. கனகலிங்கம் (அதிபர்) அவர்களும் பிரதிச் செயலாளர் நாயகம் திரு. ச. உதயநாதன் (ஆசிரியர்) அவர்களுமாக ஏனைய துறைகளுக்குமான பிரதிச் செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் அனைத்து பிரிவுகளுக்கும் அமைச்சுப் பதவிகளும் பிரதி அமைச்சுப் பதவிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு அனைத்து மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி சத்தியப் பிரமாண நிகழ்வும் கன்னி அமர்வும் பிரதான மண்டபத்திலே இடம்பெற்று தொடர்ந்தும் அமைச்சுக்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது

### ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம்

தலைவர்: திரு. த. கிரிதரன்

செயலாளர்: திரு த.மகிந்தன்

எமது ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கமானது கல்லூரி நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. ஆசிரியர் நலன்களைப் பேணி இன்ப துன்பங்களின் பங்கேற்பதுடன்

கல்லூரி சிற்றுண்டிச்சாலையை நடாத்தி கிடைக்கும் இலாபம் பாடசாலை அபிவிருத்திக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் நீண்டகாலமாக எமது கல்லூரியில் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி. சுசீலா கிருஷ்ணதாசன் அவர்களின் சேவை நலன் பாராட்டுதலோடு பிரிவுபசார நிகழ்வினை மிகவும் கோலாகலமாக நடாத்தியதோடு பாடசாலையிலிருந்து இடமாறலாகிச் சென்ற ஆசிரியர்களது பிரிவுபசார நிகழ்வினையும் சிறப்பாக நடாத்தியது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

செயலாளர்: திரு க. மோகனராஜா

பொருளாளர்: திரு ந. கிருஸ்ணமூர்த்தி

இச் சங்கம் பாடசாலையின் பௌதீக வள தேவையைப் பூர்த்தி செய்வதிலும் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்து வருகின்றது. அந்த வகையில் மாதாந்த தொலைபேசிக் கட்டணம், மின் கட்டணம் என்பவற்றிற்கான மேலதிக செலவினங்களை வழங்கி உதவுகின்றது. மேலும் வருடந்தோறும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர் தினத்தை விமரிசையாகக் கொண்டாடி பெருமைப் படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்

- அமரர் வெ. சபாநாயகம் ஞாபகார்த்தமாக வரலாறு பாடத்தில் சிறந்த மாணவருக்கான பரிசில் (க. பொ. த. சாதாரண தரம்)
- திருமதி புஸ்பா சபாநாயகம் அவர்களின் விஞ்ஞான பாடத்தில் சிறந்த மாணவருக்கான பரிசில் (க. பொ. த. சாதாரண தரம்)
- திரு. K. K. S. கனகசபை புலமைப்பரிசில் நிதியத்தின் விளையாட்டுத் துறைக்கான பரிசு
- அமரர் கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் ஞாபகார்த்தமாக பொறியியல் பீடம் செல்லும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்

பழைய மாணவர் சங்கம்

தலைவர்: திரு எஸ். செல்வரட்ணம்

செயலாளர்: திரு கே.ரவிக்குமார்

பொருளாளர்: திரு ஈ. உதயகுமார்

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுதற்குரியது. புலமைப்பரிசில் நிதியங்களை உருவாக்கி அதன் மூலம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

| பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | ரூபா |
|---|---|
| • தொழிலதிபர் ந. பாஸ்கரன் (மருத்துவம்) | 100 000. 00 |
| • அமரர் க. சிவபாதசுந்தரம் (பொறியியல்) | 100 000. 00 |
| • அமரர் வ. சிவஞானம் (கலை) | 100 000. 00 |
| • அமரர் ஆ. சுப்பிரமணியம் (ஆரட்டிஸ்ற் சேர்) நுண்கலை | 100 000. 00 |
| • அமரர். வெ. சபாநாயகம் (வறுமை நிலை) | 100 000. 00 |
| • அமரர். க. தணிகாசலம் (முகாமைத்துவம்) | 100 000. 00 |
| • பொது நிதியம் (ஏனைய துறை) | 300 000. 00 |

- அமரர் சிவசுந்தரலிங்கம் கெங்காதரன் நினைவுப் பரிசில் 2008 இலிருந்து (பல்கலைக்கழகம் செல்லும் வசதி குறைந்த மாணவர்களுக்கானது) 15 000. 00
- அமரர். கி. சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் (கணணி விஞ்ஞானம்) 100 000. 00
- அமரர். ந. சுந்தரமூர்த்தி ஞாபகார்த்தம் 100 000. 00

## வள அபிவிருத்தி நிதியம்

| | | |
|---|---|---|
| அமரர். நா. ஆழ்வாப்பிள்ளை ஞாபகார்த்தம் | 108 667. 37 | |
| பழைய மாணவர் லண்டன் | 455 800. 00 | |
| அமரர். ஆ. சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் | 200 000. 00 | |
| பழைய மாணவர் சங்கம் லண்டன் கிளை | 400 000. 00 | |
| பழைய மாணவர் சங்கம் கனடா கிளை | 416 000. 00 | |
| திரு. செ. சத்தியமூர்த்தி | 55 750. 00 | 1634000.00 |

## பரிசில் வழங்கல் நிதியம்

- அமரர் குவிதா சிவசுதன் ஞாபகார்த்த நிதியம் 100 000. 00
- அமரர் கி. ராஜ்குமார் ஞாபகார்த்தம் 100 000. 00
- (கனடா வாழ் அவரது நண்பர்கள் மூலம் மிகவும் வசதி குறைந்த க. பொ. த (சாதாரண தரம்) மாணவருக்கானது
- வருடாந்தம் கல்வியில் சிறப்பாக செயற்படும் மாணவர் ஒருவருக்கும் விளையாட்டில் சிறப்பாக செயற்படும் மாணவர் ஒருவருக்குமான கௌரவிப்பு நிதியம் (2012 ஆம் ஆண்டிலிருந்து)
- Dr. S. V. தேவேந்திரா – Excellence in Sports 150 000. 00
  (தந்தையார் அமரர் சின்னத்தம்பி வேலாயுதம் ஞாபகார்த்தம்)
- திரு. மு. ரஜீவ் தர்மேந்திரா – Excellence in Academic 150 000. 00
  (தாயார் அமரர் மனோகரி குலவரதராஜா ஞாபகார்த்தம்)
- அமரர் கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியம் (பொறியியல் துறை) 220 000. 00
  நிதி வழங்குனர் திருமதி. இரத்தினம் கணபதிப்பிள்ளை (பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை)
- அமரர் சித்தர் சின்னத்துரை ஞாபகார்த்த நிதியம் 100 000. 00
  (வழங்குனர் அமரரின் மகனும் பழைய மாணவருமாகிய திரு. சி. விஜயகுமார் விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)
- அமரர் கனகசபை கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த நிதியம் 100 000. 00
  (வழங்குனர் அமரரின் பேரனும் பழைய மாணவருமாகிய Dr. M. பாஸ்கரன்)
- துன்னாலை மத்தியைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் நடராசா (பொறியியலாளர், பழைய மாணவர்) ஞாபகார்த்த நிதி உதவுகை – வருடாந்தம் 8000. 00
  (வழங்குனர் திரு வேலுப்பிள்ளை சிவசிதம்பரம் - முன்னாள் அதிபர்)

- அமரர் பொன் கணேசன் (முன்னாள் அதிபர்) ஞாபகார்த்த நிதியம் 100 000. 00 (வழங்குனர் அமரரின் புத்திரியும் அவுஸ்திரேலியா வாழ் பழைய மாணவியுமான சௌந்தரி கணேசன்)
- அமரர் செல்லையா தர்மலிங்கம் ஞாபகார்த்த கல்வி உதவுகை நிதியம் 100 000. 00 (வழங்குனர் திரு. வே. தில்லைநாதன் - பழைய மாணவர்)
- பழைய மாணவர் சங்க பொது நிதியம் 500 000. 00
- சி. சிவகுமார் பல்கலைக் கழக தெரிவு உதவி (வருடா வருடம்) 10 000. 00
- சி. கிருஷ்ணபிள்ளை (பழைய மாணவர்) வசதி குறைந்த மாணவர் 5000. 00
- வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கான வெற்றிக் கிண்ண அன்பளிப்புகளும் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும்
- பழைய மாணவர் கா. கந்தப்பு ஞாபகார்த்தமாக திருமதி சி. கந்தப்பு Winner கிண்ண அன்பளிப்பு
- N. S. Sir ஞாபகார்த்தமாக திரு. கா. இரத்தினசபாபதி (பழைய மாணவர்) Runner up கிண்ண அன்பளிப்பு
- திரு. க. இரகுபதி பழைய மாணவர் (பிரான்ஸ்) – மெய்வல்லுனர் போட்டிக்கான வெற்றிக் கிண்ணங்கள்
- அமரர் செ. கோபிநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண அன்பளிப்பு அவரது பாடசாலை நண்பர்களால் வழங்கப்படுகிறது
- அமரர் நாகநாதன் கந்தசாமி ஞாபகார்த்தமாக அவரது மகன் க. ஜெயக்குமார் மெய்வல்லுநர் வெற்றிக் கிண்ணங்கள் அன்பளிப்பு
- திருமதி. வி. ஆன் தர்சிகா க. பொ. த உயர்தரத்தில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கான மாதாந்த நிதி உதவுகை
- தொழிலதிபர் ந. பாஸ்கரன் மாதந்தம் தலா ரூபா 100 படி 20 மாணவர்களுக்க கல்வி ஊக்குவிப்பு நிதி
- திரு. செல்லையா தவராசா அவர்களும் நண்பர்களும் வழங்குகின்ற ஊக்குவிப்பு நிதி (கல்வி அபிவிருத்திக்கான விசேட செயற்றிட்டம்) 100 000. 00
- பழைய மாணவர்கள் உயர்தர மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக விசேட செயற்றிட்டத்திற்கு நிதி உதவி செய்கிறார்கள்

ஏனைய வருடாந்த உதவுகைகள்

- விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்
- விளையாட்டுப் போட்டி வெற்றிக் கிண்ணம் வழங்கல், அழைப்பிதழ், உபசரிப்புச் செலவுகள்
- விளையாட்டுத் துறைக்கான நிதி உதவுகை 25 000. 00
- நூலக நூல் அன்பளிப்பு
- ஆசிரியர் தின விழா
- பரிசளிப்பு விழா
- கல்லூரி பெயர்ப் பலகை நாட்டல் செலவு

- கல்வி உதவுகை – வசதி குறைந்த A/ L மாணவர்
- கல்வி உதவுகை – வசதி குறைந்த O/ L மாணவர்
- வறிய மாணவர்களுக்கான சீருடை, பாதணிகள் விநியோகம்
- நெல்லியடி சமூக அறக்கட்டளை (NCC) கல்வி ஊக்குவிப்பு

மேலே கூறப்பட்ட நிதி உதவிகளை உரிய காலத்தில் தந்துதவி எமது பாடசாலை வளர்ச்சிக்கு என்றும் உதவும் எமது பழைய மாணவர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், ஏனைய சகல உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்

எமது பாடசாலையில் இருந்து இசுறு திட்டத்திற்கமைய வேறாக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு முதல் தனியாக இயங்கி வரும் விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலைக்கென பழைய மாணவர் சங்கம் இல்லாத போதிலும் அதற்காக தேவைகளையும் வள அபிவிருத்திக்கான உதவிகளையும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கமே வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

### கொழும்பு பழைய மாணவர் சங்கம்

திரு. S. விமலராஜா அவர்களை தலைவராகக் கொண்டு செயற்படும் இச் சங்கம் கல்லூரியின் தேவை அறிந்து உடனுக்குடன் உதவும் சங்கமாக உள்ளது. இச் சங்கம் ரூபா 400 000 ஐ வங்கி வைப்பிலிட்டு அதன் வட்டியை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கி எமது கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுவது போற்றுதற்குரியதாகும்

### லண்டன் பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் அவர்களதும் இலண்டன் வாழ் எமது பழைய மாணவர்களதும் முயற்சியால் 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் வருடந்தோறும் கலை விழாக்களை நடாத்தி அதில் சேகரிக்கும் பணத்தினை கல்லூரி வளர்ச்சிக்காக அனுப்பி வைப்பது போற்றுதற்குரியது. அந்த வகையில் சென்ற வருடம் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மிகப் பிரமாண்டமான நிகழ்ச்சி ஒன்றினை அவர்கள் வெற்றிகரமாக நடாத்தியமை அனைவரும் அறிந்ததே. மேலும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களில் வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் கல்லூரி மாதாவைப் பெருமைப் படுத்தும் வகையில் “விக்னேஸ்வரம்” சஞ்சிகை வெளியிடுவது பாராட்டத்தக்கது

### கனடா பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் பழைய மாணவருமான திரு. சி. அம்பிகாவரன் அவர்களதும், கனடா வாழ் எமது பழைய மாணவர்களதும் முயற்சியால் 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் எமது மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் வகையில் ரூபா 416 000 இனை வள அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி உதவியமை போற்றுதற்குரியது

## பழைய மாணவர் சங்கத்தினால் சிறப்புப் புலமைப் பரிசில் பெறும் மாணவர் விபரம்

- தொழிலதிபர் திரு. ந. பாஸ்கரன் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (மருத்துவம்) – செல்வி தர்சினி ஈசன் - பேராதனைப் பல்கலைக்கழகம்

- அமரர் ந. சுந்தரமூர்த்தி ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (பௌதீக விஞ்ஞானம்) – செல்வன். பாலேந்திரன் சஞ்சீபன் - கிழக்குப் பல்கலைக்கழகம்

- அமரர் வெற்றிவேலு சபாநாயகம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (கலைத்துறை) – செல்வன் குனேந்திரசீலன் சக்தீசன் - பேராதனைப் பல்கலைக்கழகம்

- அமரர் கணபதிப்பிள்ளை தணிகாசலம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (வர்த்தகத்துறை) – செல்வி ஆன் வினோஜிதா அன்ரனி இராசநாயகம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

- அமரர் கிருஷ்ணர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (கலைத்துறை) – செல்வி நிருபா ரட்ணம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- அமரர் வல்லிபுரம் சிவஞானம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (கலைத்துறை) – செல்வி சானுஜா உதயராஜ் - கிழக்குப் பல்கலைக் கழகம்

- அமரர் பொன் கணேசன் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (கலைத்துறை) – செல்வன் பெனடிக்ற் லிவிங்ரன் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

- அமரர் கௌரிமனோகரி குலவரதராஜா ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  Excellence in Academics – செல்வி ரேணுகா உதயகுமார்

- அமரர் சின்னத்தம்பி வேலாயுதம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  Excellence in Sports – செல்வன் ஈசன் இராஜேஸ்வரன்

- அமரர் சின்னத்தம்பி வேலாயுதம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  Excellence in Sports – செல்வி நிதர்சனா சிவகுமார்

- அமரர் கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (க. பொ. த. சாதாரண தரம்) – செல்வி தமிழினி தவராசா
  செல்வி திலைக்ஷனா பிமேதாசா
  செல்வன் யோகராஜன் வேணுஜன்

- அமரர் கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் (லண்டன் பழைய மாணவர் சங்கம்) ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சகல துறை சிறந்த மாணவர் - செல்வி தயாளினி கதிர்வேலு

- அமரர் குவிதா சிவசுதன் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவன் கனிஷ்ட பிரிவு – செல்வன் விவேகானந்தகுமார் அபிமன்யு
  சிறந்த மாணவி கனிஷ்ட பிரிவு – செல்வி காதம்பரி கிருஷ்ணதாசன்
  சிறந்த மாணவன் சிரேஷ்ட பிரிவு – செல்வன் சிவகுமாரன் கஜலக்ஷன்
  சிறந்த மாணவி சிரேஷ்ட பிரிவு – செல்வி சயந்தனா யோகநாதன்

**பாடசாலை அபிவிருத்திச்சங்கம் ஊடாக வழங்கப்படும் நிதி**

- அமரர் வெ. சபாநாயகம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (வரலாறு – கனிஷ்ட பிரிவு) – செல்வன். யோகராஜன் வேணுஜன்

- திருமதி புஸ்பா சபாநாயகம் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவர் (விஞ்ஞானம் - கனிஷ்ட பிரிவு) – செல்வி. தமிழினி தவராசா

- திரு. மு. மு. ஞ. கனகசபை ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவன் (விளையாட்டு) – செல்வன் சிவபாலசிங்கம் ஆர்த்திகன்

- திரு. K. K. S. கனகசபை ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்
  சிறந்த மாணவி (விளையாட்டு) – செல்வி. தனுசியா இளங்கோ

## நன்றிகள்

எங்கள் அழைப்பை முழு மனதுடன் ஏற்று இக் கல்லூரியின் பரிசளிப்புத் தினமாகிய இந் நன்னாளில் வருகை தந்து சிறப்பித்து இனிய உரையாற்றி எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்த முதன்மை விருந்தினருக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பிலான இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் கல்லூரியின் இந் நாளிலே நினைவுப் பேருரையை ஆற்றிய வைத்திய கலாநிதிக்கும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்த சிறப்பு விருந்தினருக்கும் இவ் வேளையிலே எமது சிரந் தாழ்த்திய நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

எமது பாடசாலையின் தேவைக்கு ஏற்ப ஆலோசனைகளும், உதவிகளும் நல்கிவரும் வலயக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இறுதியாக எமது கல்லூரி பல வளங்களையும் பெற்று வடமராட்சி வலயத்தின் வளம் நிறைந்த பாடசாலையாக அழகுற அமைய வழிவகுத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறுவதுடன் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு சகல வழிகளிலும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வரும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எம் பணிவான நன்றிகளைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

# கல்லூரி கீதம்

வாழ்கவே வளர்க வாழ்கவே – வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலை மறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்
(வாழ்கவே வளர்க)

கரவெட்டி

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ் தன் ஊற்றிடமாகத்
திறன் பணி கண்டிடுவோம்
(வாழ்கவே வளர்க)

வர்த்தக இயலும் தொழில்முறைக் கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே வளர்க)

எண்ணொடு எழுத்தும் என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றதைக் கூறிடுவோம்
(வாழ்கவே வளர்க)